2017 ஜூலை 3]

பட்சத்திலே மேலும், கல்லூரிகள் தேவைப்படின், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசானது பரிசீலிக்கும் என்பதைச் சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

நெல் கொள்முதல் நிலையம்

***14622—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஒன்றியம், இடங்கண்ணி மற்றும் அண்ணங்காரன்பேட்டை கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதிக்குட்பட்ட தா.பழூர் ஒன்றியம், இடங்கண்ணி மற்றும் அண்ணங்காரன்பேட்டை ஆகிய கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் வரப்பெறாததாலும், நெல் வரத்து இல்லாத காரணத்தாலும், நடப்பு கொள்முதல் பருவத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால், தேவைக்கேற்ப, நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்திலே இந்தியக் குடியரசுத்*

தலைவராகப் பொறுப்பேற்கவுள்ள திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் எங்களிடம் வாக்கு சேகரிக்க வந்தபோது, அம்மா அவர்கள் சொர்க்கத்தில் வாழ்வதாக அனைவரும் பாராட்டினார்கள். அப்படி இந்திய நாடே, உலகமே பாராட்டுகின்ற, சொர்க்கத்தில் வாழ்கின்ற, அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் எண்ணத்திற்கேற்ப செயல்படுகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன, அம்மா சொர்க்கத்தில் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். அதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, அவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொர்க்கத்தில் இருக்கிறார்கள், அவரை வணங்குகிறேன் என்று சொல்கிறார். அதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) அதை இன்னொருவர் சொன்னார் என்று சொல்கிறார். அதில் ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். அதெல்லாம் ஒன்றும் தவறில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் தவறில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் தவறில்லை. உட்காருங்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் ஒன்றும் தவறில்லை. உட்காருங்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: அரியலூர் மாவட்டத்தில் தா. பழூர் ஒன்றியம், ஜெயங்கொண்டம் தொகுதியில் பாதியையும், அரியலூர் தொகுதியில் பாதியையும் உள்ளடக்கியது. தா. பழூர் ஒன்றியத்தில், குறிச்சி, காரைக்குறிச்சி, வாழைக்குறிச்சி, தென்கச்சிப் பெருமாள்நத்தம், இடங்கண்ணி, அண்ணங்காரன்பேட்டை, அமிர்தராயன்கோட்டை, கோடாலிக்கருப்பூர் மற்றும் சில கிராமங்களில் பொன்னாறு மூலமாக நெற்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களின் அறிவிப்பின்படி, பொன்னாறு இப்போது தூர் வாரப்பட்டு வருகிறது. எனவே, பொன்னாறு மூலமாக பாசனம் பெறுகின்ற இந்தப் பகுதியிலே விளையும் நெல்லை விற்க

வேண்டுமாயின், தஞ்சை மாவட்டத்திற்குத்தான் நாங்கள் செல்ல வேண்டியுள்ளது. எனவே, எனது தொகுதி மக்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இடங்கண்ணி மற்றும் அண்ணங்காரன்பேட்டையில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு கொள்முதல் பருவத்தில் அரியலூர் மாவட்டத்தில் மட்டும் 11 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 563 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள இடங்கண்ணி மற்றும் அண்ணங்காரன்பேட்டை ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெறவில்லை. இப்பகுதி விவசாயிகள் வாழைக்குறிச்சி, காரைக்குறிச்சி மற்றும் தா.பழூர் ஆகிய இடங்களில் செயல்படும் நெல் கொள்முதல் நிலையங்களில் தங்களது நெல்லை விற்பனை செய்து வருகின்றனர். இருப்பினும் எதிர்வரும் கொள்முதல் பருவத்தில் சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளபடி, அவர் குறிப்பிட்ட பொன்னாறு பகுதியிலே எவ்வளவு விளைச்சல் வந்தாலும் அவ்வளவு நெல்லையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நெல் கொள்முதல் நிலையத்தைத் திறந்து, அதனைக் கொள்முதல் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஏற்படும் சில குறைபாடுகளை நீக்குவதற்காக e-procurement முறை செயல்படுத்தப்படும்" என்ற அறிவிப்பை இந்த அவையில் விதி 110-ன்கீழ் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அவர்கள் கூறிய அருமையான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், இதுவரை, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லையெனில், 2, 3 இடங்களில் pilot scheme-ஆக அந்தத் திட்டத்தை செயல்பாட்டிற்குக் கொண்டு வர முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தாங்கள் கொண்டு வரும் நெல்லை எந்தவித பிரச்சினைகளும் இன்றி, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காக e-procurement என்கின்ற திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் அறிமுகப்படுத்திய தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டே டெல்டா மாவட்டங்களில் e-procurement திட்டம் தொடங்கப்பட்டுவிட்டது. கடந்த 140 வருடங்களில் ஏற்படாத வறட்சி தமிழகத்தில் இந்த ஆண்டு நிலவிக் கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும், டெல்டா மாவட்டத்தில் 625 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் 30 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன. இதுவரை அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் 2 இலட்சத்து 11 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம்

2017 ஜூலை 3]

ஆகிய டெல்டா மாவட்டங்கள் முழுவதிலும் e-procurement முறையில்தான் நெல் கொள்முதல் செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

தரம் உயர்த்துதல்

***6749—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், "அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?" என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார். அய்யலூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியாக இருக்கின்றது. ஏற்கெனவே, வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் தரமுயர்த்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற காரணத்தால், அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.